செ.வெ.எண்: 500/2019 நாள்: 03.10.2019

# திருவண்ணாமலை மாவட்டத்தில் 2720 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.6.80 இலட்சம் மதிப்பிலான சமுதாய வளைகாப்பு மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பங்கேற்பு...

திருவண்ணாமலை மாவட்டம், மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், கொங்கராம்பட்டு ஊராட்சி, ஸ்ரீ லட்சுமி ஆறுமுக கவுண்டர் திருமண மண்டபம், செய்யாறு நகராட்சி, ஜெ ஜெயலலிதா அறக்கட்டளை திருமண மண்டபம், ஆகிய பகுதிகளில் இன்று (03.10.2019) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பாக நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 400 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் சீர்வரிசை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் திரு. பா. கந்தன், ஆரணி வருவாய் கோட்ட அலுவலர் திருமதி. எல். மைதிலி, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு. கோவிந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. வெ. குணசீலன், அரசு அலுவலர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விழாவில் பேசியதாவது ‘மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் முழுமையான ஆரம்பகால குழந்தை மேம்பாட்டுக்கான மிகப்பெரிய சமூக அடிப்படையிலான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், பின் தங்கிய சமூகங்களுக்கிடையில் ஆரம்ப சுகாதாரம் மற்றும் கல்வி முறைகள் ஆகிய இரண்டிற்கும் ஒரு முக்கியமான இணைப்பாக செயல்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் தாய் மற்றும் குழந்தைகளின் நலனைக் கவனிக்கும் ஒரு முன்னோடி திட்டமாகும். இத்திட்டத்தினால் தமிழகத்தில் இளம் குழந்தைகளின் ஒட்டு மொத்த ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலை மேம்படுத்தப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பாக 2127 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகிறது. இம்மையங்கள் மூலம் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் பயன் அடைந்து வருகிறார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ரூ.6.80 இலட்சம் செலவில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு புடவை, மாலை, மஞ்சள், குங்குமம், வளையல், வெற்றிலை, பாக்கு உள்பட மங்கள பொருட்களுடன் இனிப்பு மற்றும் பரிசுப் பொருட்கள், சீர்வரிசை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகிறது. மேலும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு அறுசுவை உணவும் வழங்கப்படுகிறது. கர்ப்பிணிகளின் நலம் காக்கவும், தாய் சேய் நலனை மேம்படுத்துவதற்காகவும், “சமுதயா வளைகாப்பு” விழா நடத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 13,600 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.34.00 இலட்சம் செலவில் “சமுதாய வளைகாப்பு” நடத்தப்பட்டுள்ளது. மேலும், தற்போது இந்த ஆண்டு திருவண்ணாமலை மாவட்டத்தில் 2720 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.6.80 இலட்சம் செலவில் “சமுதாய வளைகாப்பு” நடத்தப்பட்டுகிறது. மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 2127 அங்கன்வாடி மையங்களுக்கு வரும் குழந்தைகளின் சிறப்பு ஊட்டச்சத்து தேவைகளை கருத்தில் கொண்டு அனைத்து வட்டாரங்களிலும் தக்காளி சாதம், கலவை சாதம், வே வைத்த பாசிப்பயிறு, கருப்புக் கொண்டைக் கடலை, காய்கறி புலவு, எலுமிச்சை சாதம், பருப்பு சாதம், வேகவைத்த உருளைகிழங்கு, அவித்த முட்டை ஆகிய புதிய வகை கலவை சாதம் திங்கள் முதல் ஞாயிறு வரை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தல் உள்ள 2127 அங்கன்வாடி மையங்களுக்கும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மூலம், குழந்தைகளின் எடை எடுத்து வளர்ச்சியை கண்காணிப்பதற்காக மூன்று விதமான எடை எடுக்கும் கருவிகள் ரூ.97.94 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. அவசர தேவைக்கு பயன்படும் மருந்துகள் அடங்கிய மருந்து பெட்டி ஒரு மையத்திற்கு ரூ.1000/- வீதம் மொத்தம் ரூ.21.27 இலட்சம் செலவிலும், முதலுதவி பெட்டி ஒரு மையத்திற்கு ரூ.405.50 வீதம் ரூ.8.62 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து வளர் இளம் பெண்களுக்கும் இரும்பு சத்து மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மையங்களுக்கு கடாய், கரண்டி, தட்டு, டம்ளர் ரூ.35.71 இலட்சம் செல்வி வழங்கப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு முன் பருவ கல்வியினை பயிற்றுவிக்கும் பொருட்டு ரூ.3000/- மதிப்பிலான முன்பருவ உபகரணங்கள் ரூ.63.81 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

அங்கன்வாடி குழந்தைகளிடையே தன் சுத்தம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ரூ.500/- மதிப்பிலான தன் சுத்த பெட்டிகள் ரூ.10.63 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்களுக்கு 2127 கொசுவலைகள் ரூ.6.38 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்களின் தரத்தை உயர்த்தும் வகையில் 166 மையங்களுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ.1.66 கோடி செலவில் குழந்தை நேய கழிப்பிடங்கள், சின்டெக்ஸ் தண்ணீர் தொட்டி, கை கழுவும் இடம், வெளிப்புற விளையாட்டு கருவிகள், சமையலறையில் கழுவும் தொட்டி, காலணி அலமாரி, குடிநீர் வடிகட்டி, சாய்வு நாற்காலிகள், புத்தகப்பை, தண்ணீர் பாட்டில், அடையாள அட்டை, ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு கட்டிடங்களில் இயங்கும் 1618 அங்கன்வாடி மையங்களுக்கு மின் வசதியும், 2127 மையங்களையும் நவீன மயமாக்குவதற்கு ரூ.1.05 கோடி செலவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக 251 அங்கன்வாடி மையங்கள் ரூ.14.00 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளை கவரும் விதத்திலும், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் வகையிலும் 837 அங்கன்வாடி மையங்களில் வண்ணமயமான சுவர் சித்திரம் ரூ.12.10 இலட்சம் செலவில் வரையப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளின் தன் சுத்தம் மற்றும் கழிப்பிடங்களை பயன்படுத்தும் பழக்கத்தை வளர்க்கவும் 902 அங்கன்வாடி மையங்களில் தலா ரூ.18,000/- வீதம் ரூ.1.62 கோடி செலவில் குழந்தைகள் நேய கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்களில் 4266 மெட்ரிக் டன் அளவிலான இணை உணவு ரூ.22.81 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 6 மாதம் முதல் 36 மாதம் வரை உள்ள குழந்தைகளும், 14,783 கர்ப்பிணிகளும், 15,537 பாலூட்டும் தாய்மார்களும் பயன் அடைந்து வருகிறார்கள்.

அங்கன்வாடி மைங்களில் 2 வயது முதல் 5 வயது வரையுள்ள 54,388 குழந்தைகளுக்கு முட்டையுடன் கூடிய கலவை சாதம் ஆண்டொன்றுக்கு ரூ.8.80 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மையங்களில் 1 வயது முதல் 2 வயது வரை உள்ள 31,206 குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.40.00 செலவில் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மையங்கள் மூலம் 57,226 வளர் இளம் பெண்களுக்கு இணை உணவு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைவில்லாத மாநிலமாக மாற்றுவதுடன், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்கும் நலப்பணிகளை குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள், வளர் இளம் பெண்களுக்கு தொடர்ந்து அளித்து வருகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**